# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2072/52 - 2018 මැයි මස 25 වැනි සිකුරාදා - 2018.05.25

*2072/52 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 9/2011*

***1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்***

*72 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதியிலிருந்து பயனுறுமாறு 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு இக்கட்டளையின் மூலம் உரித்தாக்குகின்றேன்.*

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

கொழும்பு,
*2018, மே 25.*

**அட்டவணை**

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் ஹோவாகம கோறளையில் பல்லே பற்றிலுள்ள மகரகம பிரதேச செயலாளர் பிரிவின் கலல்கொட இல. *493* கிராம அலுவலர் பிரிவினுள் அமைந்துள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர், பி.கே. எஸ். பமுனுசிங்ஹவினால் ஆக்கப்பட்ட *2007.10.13* ஆந் திகதியிடப்பட்ட *887* ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட "கனத்தேவத்த மற்றும் தெல்கஹவத்த" என அழைக்கப்படும் துண்டு *4 - 1*B *1* என அடையாளமிடப்பட்ட காணியின் பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : கனத்தேவத்த ; கிழக்கில் : வீதி; தெற்கில் : துண்டு இல. : *4 - 1* B *2* ; மேற்கில் : *255/303* ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு இல. *4 - 1* A பரப்பளவில் இது, அதன்மீதுள்ள மண், மரங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து வீதி வழிகளை பயன்படுத்துவதற்கான உரிமையுடனும் பத்து பேர்ச்சுக்களைக் (00ஏ. 00றூ. 10 பே.) கொண்டுள்ளது.

இக்காணி ஹோமாகமக் காணிப்பதிவத்தில் ஜி - *1657/245* ஆம் பக்கதில் *915/22* இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*06-553*


1A - PG 4055 — 107 (2018/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.